**cross**

**O.S.No. 240/2019**

**Date:04.09.2025**

**பி.வா.சா 1. ஆபிரகாம்**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2009ம் ஆண்டு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்ப்பட்டதாக சொல்லியுள்ளதை பொறுத்து எந்த இடத்தில் யார் முன்னிலையில் மேற்படி பாகப்பிரிவினை நடைபெற்றது என்பதை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்கள் குடும்பத்தில் உண்டு. 2009 ஆண்டு வாய்மொழி பாகத்தை அனுசரித்து உங்கள் பெயரில் பட்டா மாற்றம் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களை பொறுத்து உங்கள் பெயரில் தனிப்பட்டாக்கள் எதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சில சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் சில சொத்துக்களுக்கு தாக்கல் செய்யவில்லை. 2009ம் ஆண்டு பாகத்தை நேரடியாக தெரிந்த சாட்சிகள் யாராவது தற்போது உயிரோடு இருக்கிறார்களா என்றால் நானும் எனது அக்காவும் மட்டும் இருக்கிறோம். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓட்டுநராக பணிபுரிந்தேன். இவ்வழக்கின் வாதி ஜேம்ஸ் ஜோசப் பி.ஈ படித்து பொறியாளராக பணிபுரிந்தார். 2ம் பிரதிவாதி அன்னமரியம்மாள் எவ்வளவு தொகை செலவழித்து சீர் வரிசை செய்துள்ளேன் என்று எனது எதிர்வழக்குரையில் செல்லப்படவில்லை என்றால் அதுபற்றி கேட்டால் சொல்ல இயலாது. இந்த வழக்கில் சேர்க்காமல் விடுபட்ட சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்கள் எதையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் 2009 ஆண்டு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றாலும் தற்போது வரை கூட்டு குடும்ப சொத்தாகவே உள்ளது என்றாலும் சரியல்ல. எனது அண்ணனுக்கும் எனது அக்காவும் சொத்தில் பங்கு உண்டு என்று சொன்னால் அவர்கள் ஏற்கனவே பங்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் தற்போது அவர்கள் பங்கு உண்டு என்று சொன்னால் கொடுக்கிறேன்.

1ம் தபசில் 4ம் அயிட்ட சொத்து எனது சித்தப்பா துரைராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்வதை நிரூபணம் செய்ய ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் தபசில் 7ம் அயிட்ட 6, 20 லக்கமிட்ட சொத்து கூடுதல் விஸ்தீரணம் கொண்டது என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சில சொத்துக்களுக்கு கொடுத்துள்ளேன் சில சொத்துக்களுக்கு கொடுக்கவில்லை குறிப்பிட்டு எந்த சொத்துக்கு கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. 1ம் தபசில் 1,2 அயிட்ட சொத்துக்கள் வீடு ரூ.10 லட்சத்துக்கு மேல் மதிப்பீடு கொண்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி எந்த காலத்திலும் யாருக்கும் ஆதரவாக பாக விடுதலை ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தில் 3ல் 1 பங்கு 2ம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை கூட்டு அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல.